


திருவாரூர் நகராட்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தினை நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். தொழில்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச்சந்திரன், நகர செயலாளர் வாரை.எஸ். பிரகாஷ், நகர் மன்ற தலைவர் புவனப்ரியா செந்தில், துணைத் தலைவர் அகிலா சந்திரசேகர், நகராட்சி ஆணையர் சுரேந்திர ஷா உள்ளிட்டோர் உடனிருந்தார்.

### டெல்டா மாவட்டங்களில்

# விவசாயிகள் நலன் காத்திட மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த ஆலோசனைக் கூட்டம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக். 4 .

டெல்டா மாவட்டங்களில் விவசாயி களின் நலன் காத்திட நெல் கொள்முதல், சேமிப்பு மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (2.10.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், கடலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் ஆகிய டெல்டா மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் நெல் கொள்முதல், சேமிப்பு, இருப்பு, நகர்வு, அரவை மற்றும் உரங்கள் இருப்பு தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு மேட்டூர் அணை உரிய காலத்தில் திறந்த காரணத்தினாலும், கால்வாய்கள் தூர்வாரும் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதாலும், பருவ மழையினால் விவசாயிகளுக்கு தண்ணீர் குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைக்க ப்பெற்றதாலும், இடுபொருள் மானியம், விவசாயக் கடன்கள் ஆகியவற்றினால் கடந்த ஆண்டைவிட அதிக அளவில் விளைச்சலும், மகசூலும் விவசாய பெருங்குடிமக்களுக்கு டெல்டா மற்றும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் கிடைத் துள்ளது.

இந்த அரசு பொறுப்பேற்றவுடன், மழைக்காலங்களில் விவசாயிகள் பாடுபட்டு உற்பத்தி செய்த நெற்பயிர்கள் பாதிக்கப்பட கூடாது என்ற நோக்குடன் அதிக அளவில் நெல் சேமிப்புக் கிடங்குகளை கட்டிவருகிறது.

அந்தவகையில், இதுவரை நெல் மணிகளைப் பாதுகாத்திட 4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய நவீன நெல்சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 2024–25 நெல் கொள்முதல் பருவத்தில் முன் எப்போதும் இல்லாத அளவு சாதனையாக 47.99 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2024–2025 கொள்முதல் பருவத்தில் செப்டம்பர் மாதத்தில் நாகப்பட்டினம், திருவாரூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர் மற்றும் கடலூர் ஆகிய ஐந்து டெல்டா மாவட்டங்களில் 1.27 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இந்த மாவட்டங்களில் மட்டும் 3.20 இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த ஆண்டு உற்பத்தி பெருமளவு அதிகரித்துள்ள காரணத்தினால் விவசாயிகளிடமிருந்து எவ்வித தாமதமுமின்றி நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும் அதேசமயம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் விரைவாகவும், பாதுகாப்பாகவும் சேமிப்புக் கிடங்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்ற முக்கிய நோக்கத்துடன் இக்கூட்டம் நடத்தப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆலோசனைக் கூட்டத்தில், அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசுச் செயலாளர்கள் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், மாவட்டவாரியாக அமைக்கப்பட்டுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களின் எண்ணிக்கை, இருப்பு, சேமிப்பு, நகர்வு, கிடங்கு வசதி மற்றும் உரங்கள் இருப்பு ஆகியவை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டறிந்தார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் தற்போது நடைபெற்றுவரும் கொள்முதல் பணிகள், அதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள சிறப்பு ஏற்பாடுகள், பாதுகாப்பு வசதிகள் ஆகியவை குறித்து எடுத்துரைத்தனர்.

கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகளை சேமிக்க தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சேமிப்புக் கிடங்குகள் மட்டுமின்றி, வேளாண் துறையின் கீழ் வரும், வேளாண் விற்பனைத் துறை சேமிப்புக் கிடங்குகளையும், வேளாண் உற்பத்தித் துறையில் உள்ள ஒரு இலட்சம் மெட்ரிக் டன் கிடங்கு வசதியினையும், வேறு பல துறைகளின் கிடங்குகளையும் தேவைப்படும் இடங்களில் பயன்படுத்திக்கொள்ளவும், கொள்முதல் செய்யப்படும் நெல் உடனடியாக அரவை ஆலைகள் மற்றும் சேமிப்புக் கிடங்குகளுக்கு கொண்டு செல்லும் பணிகளை துரிதப்படுத்த வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதுமட்டுமின்றி, டெல்டா மாவட்டங்களுக்கு சிறப்பு கண்காணிப்பு அலுவலர்களை நியமித்திடவும், வேறு மாவட்டங்களிலிருந்து கூடுதல் அலுவலர்களை அனுப்பி பணிகளை மேற்பார்வையிடவும் முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். நெல் கொள்முதல் நிலையங்களில் 2025 – 26 ஆம் ஆண்டில் மிக அதிகமாக நெல் கொள்முதல் எதிர்பார்க்கப்படுவதால் அனைத்து இடங்களிலும் போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் இருப்பதையும், விவசாயிகளுக்கு எவ்விதச் சிரமமும் இன்றி கொள்முதல் பணிகள் மேற்கொள்ளப்படுவதையும் உறுதிப்படுத்திட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், டெல்டா மாவட்டங்களின் நெல் கொள்முதல் நிலையங்கள் மற்றும் கிடங்குகளிலிருந்து கூடுதல் இரயில்வே வேகன்கள் மூலம் பிற மாவட்டங்களுக்கு விரைந்து நெல் மூட்டைகளை அனுப்பிடவும் அறிவுறுத்தினார்.

மழைக்காலங்களில் கூடுதல் கவனத்துடன் நெல் கொள்முதலைச் சிறப்பாகச் செய்திடவும், உரத் தேவையை நிறைவு செய்திடவும், நெல் சேமிப்பு மற்றும் நகர்வைத் துரிதப்படுத்தவும், டெல்டா மாவட்டங்களின் ஆட்சித் தலைவர்கள் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில், வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிருவாக இயக்குநர் அ. ஜான் லூயிஸ், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் நிருவாக இயக்குநர் முனைவர். ஜெ.விஜயராணி, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ப. ஆகாஷ், (நாகப்பட்டினம்), வ. மோகனச்சந்திரன், (திருவாரூர்), ஹெச்.எஸ். ஸ்ரீகாந்த், (மயிலாடுதுறை), திருமதி பா. பிரியங்கா பங்கஜம், (தஞ்சாவூர்), சிபி ஆதித்யா செந்தில்குமார், (கடலூர்), வே.சரவணன், (திருச்சிராப்பள்ளி), பொ.இரத்தினசாமி, (அரியலூர்) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மறைந்த முன்னாள் சேலம் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வீரபாண்டி ஆ.ராஜா அவர்களின் 4 ஆம் நினைவு நாளை முன்னிட்டு பூலாவரியில் உள்ள அவரது நினைவிடத்தில் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., தலைமையில் தி.மு.க.வினர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்வில் அமைச்சர் இரா.ராஜேந்திரன், டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட துணை செயலாளர்கள் க.சுரேஷ்குமார், கு.சின்னதுரை, மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், டாக்டர் தருண், சந்திரமோகன், மலர்விழி ராஜா மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் ,குடும்பத்தினர் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்

### தலைமைக் கணக்காளராக பல ஆண்டுகள் பணிபுரிந்த

# ‘முரசொலி’ மாணிக்கம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, அக். 4 -**

**‘முரசொலி’ நாளிதழில் தலைமைக் கணக்காளராகப் பல ஆண்டுகள் பணிபுரிந்த ‘முரசொலி’ மாணிக்கம் (வயது 93) அவர்கள் 1.10.2025 அன்று பெசன்ட் நகரிலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவலறிந்து கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**மறைந்த மாணிக்கம் என்கிற அழகு மாணிக்கம் அவர்கள் முரசொலி அலுவலகத்தில் தலைமைக் கணக்காளராக 60 ஆண்டுகளுக்கும் மேல் பணிபுரிந்து வந்தவர். அதற்கு முன் முரசொலி மாறன் அவர்களும், ‘முரசொலி’ செல்வம் அவர்களும் நடத்தி வந்த மேகலா பிக்சர்ஸில் பணி புரிந்தவர். பிறகு ‘முரசொலி’யை வெளியிட்ட அஞ்சுகம் பதிப்பகத்தில் இணைந்து தலைமைக் கணக்காளராகப் பணியாற்றியவர்.**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் மிகவும் அணுக்கமாகவும், நெருக்கமாகவும் இருந்தவர். ‘நெருக்கடி நிலை’ காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத் துணையாக இருந்து பணிபுரிந்தவர்களில் முதன்மையானவராகத் திகழ்ந்தவர். இவரது சொந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டி என்ற கிராமமாகும்.**

**என்னிடமும் அன்புடனும், பற்றுடனும் பழகி வந்தவர் மாணிக்கம் அவர்கள்!**

**மிகவும் அமைதியான சுபாவம் கொண்டவரான அவர், முரசொலி நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்குபவராகவும் செயலாற்றி வந்தார்.**

**மாணிக்கம் அவர்களின் மறைவுச் செய்தியறிந்து மிகவும் துயரமுற்றேன். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

வயது முதிர்வு காரணமாகவும், உடல் நலக் குறைவினாலும் பெசன்ட் நகரிலுள்ள இல்லத்தில் ஓய்வெடுத்து வந்த மாணிக்கம் அவர்கள் 1.10.2025 அன்று பகல் 12 மணியளவில் மறைவெய்தினார்.

மறைந்த அன்னாருக்கு அரசு மோகன் என்கிற மகனும், மலர்விழி என்கிற மகளும் உள்ளனர். அரசு மோகன் மருத்துவராக ஓமன் நாட்டில் பணிபுரிந்து வருகிறார். மகள் மலர்விழி மும்பையில் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். அவரது துணைவியார் கஸ்தூரி அவர்கள் சில ஆண்டுகளுக்கு முன் மறைவெய்தி விட்டார்.

மறைந்த மாணிக்கம் அவர்களின் இறுதி ஊர்வலம், 2.10.2025 அன்று காலை 11 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு பெசன்ட் நகர் இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

### கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் வி.செந்தில் பாலாஜி தலைமையில்

# பெரியார் - அண்ணா - கலைஞர் படங்களுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்!

## மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் அறிக்கை!

*கோவை, அக். 4 -*

*கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது என்று கோவை மாநகர் மாவட்டக் கழக பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை விடுத்துள்ளார்.*



*அவரது அறிக்கை வருமாறு : கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழகத்தின் சார்பில் கழக மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நாளை (05.10.2025 - ஞாயிற்று கிழமை) காந்திபுரம் பேருந்து நிலையம் அருகில் காலை 09.00 மணியளவில் பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாநகராட்சி மேயர், பகுதி கழக பொறுப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள், பகுதி கழக, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணை தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்*



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர், அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மொடக்குறிச்சி அன்பகம் கட்டிடம் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.இதில் அந்தியூர் ப.செல்வராஜ் எம்.பி, வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., ஈரோடு மாநகராட்சி மேயர் நாகரத்தினம் சுப்பிரமணி, ஜோயல், இன்பா ரகு, அப்துல் மாலிக், இளையராஜா, சீனிவாசன், கஜேந்திர பிரபு, ஜி.பி.ராஜா, ஆனந்தகுமார் உள்ளிட்ட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.